பாலாற்றில் வெள்ளம்.

*வினா எண். 542—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பாலாற்றில் வெள்ளம் ஏற்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதனால் விளைவிக்கப்பட்ட சேத விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) ஆம்.

(ஆ) பொருள் சேதம் ரூ. 11,95,000; உயிர்ச்சேதம் 11 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை எவ்வளவு? அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு பூராவும் பாதிக்கப்பட்ட மக்கள் தொகை ஏறக்குறைய 20,64,000 என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களில் இறந்தவர்கள் 221.

[முற்பகல் 9-50]

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதிலும் உள்ள விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. அதுபோல திருச்சி மற்றும் பாலாற்றின் கரையிலுள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 கிலோ அரிசி கொடுக்கப்பட்டதா ? அங்கே தேர்தல் உடனடியாக வராது என்ற காரணத்தினால் கொடுக்கப்படவில்லையா? அல்லது வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய ஆணைப்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5 கிலோ அரிசி என்றுதான் இருக்கிறது. ஆனால் சில நேரங்களில் மக்கள் அதிகமாகப் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது முதல் அமைச்சர் அவர்கள் 50 கிலோ

1979 மார்ச் 26]

அரிசி என்று அறிவித்தார்கள். சென்னை மாநகரில் மட்டும் அல்ல எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட மாவட்டங்கள் : சென்னை, செங்கற்பட்டு, தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மொத்தமாக கொடுக்கப்பட்ட அரிசி எவ்வளவு என்றால், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்ட அரிசி 12,000 கிலோ என்று சொல்லிக்கொள்கிறேன். மொத்தமாக தமிழ்நாடு பூராவும் கொடுக்கப்பட்ட அரிசி ஒரு கோடியே ஐந்து லட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐநூறு கிலோ கொடுக்கப்பட்டிருக்கிறது.

தெலுங்கு செட்டியார் இனத்தவர்.

*வினா. எண் 543—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 24 மனை தெலுங்கு செட்டியார் இனத்தவர்களை மிகவும் பிற்பட்டோர் வகுப்பினராக ஆக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மனை தெலுங்குச் செட்டியார் இனத்தவர்கள், குறிப்பாக தமிழ்நாட்டிலே மிகவும் பின்தங்கியவர்கள் என்பது அரசுக்கு தெரியும். பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 24 மனை தெலுங்கு செட்டியார் பிரிவைச் சேர்ந்தவர்களை மிகவும் பிற்பட்டோர் வகுப்பினர் பிரிவில் சேர்க்கவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 24மனை தெலுங்கு செட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டில் தர்மபுரி, திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏறத்தாழ 1,08,262 பேர்கள் இருக்கிறார்கள். 1969ஆம் ஆண்டு